# அரியலூர் நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td colspan="4">அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 08.11.2021ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு தனிஅலுவலர் அவகளின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.</td></tr>
<tr><td>08.11.2021</td><td>180</td><td>ஆணையர் (பொ) அவர்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td><td></td></tr>
<tr><td>08.11.2021</td><td>181</td><td>அரசாணை நிலை எண்.92 நாள்.30.10.2021ன்படி, அரியலூர் நகராட்சியின் வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021-22ன்கீழ் ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டில் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டிடம் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பதிவுசெய்யலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>08.11.2021</td><td>182</td><td>அரியலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணிக்கு வீடு வீடாக குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்கள் (BOV) பழுதடைந்த நிலையில் இயங்காத நிலையில் இருக்கும் வாகனங்களை பழுது நீக்கம் செய்யும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் ரூ.8.90 இலட்சத்திற்கு மேற்கொள்ள 23.02.2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கம் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>M/s.M.H.T Engineering, Chennai</th><th>M/s.Yes Yes Jee Engineering, Chennai</th></tr>
<tr><td>1</td><td>பேட்டரி வாகனம் (BOV) பழுது மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>ரூ.8,40,000/-</td><td>ரூ.8.43,500/-</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.M.H.T Engineering, Chennai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>08.11.2021</td><td>183</td><td>அரியலூர் நகராட்சி பொறியியல் பிரிவு வார்டு எண்.1 முதல் 18 பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய், பாதாள சாக்கடைத்திட்டம், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு ஆகிய விபரங்கள் அடங்கிய வரைபடம் தயாரித்து ஜல் ஜீவன் மிஷன் திட்டத்திற்கு Total Station Instrument மூலம் அளவை செய்ய உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அலுவலக நிர்வாகம் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>08.11.2021</td><td>184</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் பகிர்மான குழாய்கள், திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் வரை உள்ள பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்ய வருடாந்திர செலவினமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td>08.11.2021</td><td>185</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் பகிர்மான குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்திட ஏதுவாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>08.11.2021</td><td>186</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிப்பிடத்தில் உள்ள ஆழ்குழாய் மோட்டார்கள் மற்றும் சிறுமின் விசைப்பம்பு ஆழ்குழாய் மோட்டார் மற்றும் அலுவலக மோட்டார் ஆகிய மோட்டார் மற்றும் பம்புகள் பழுதடைவதால் அவற்றை குடிநீர் அத்தியாவசியத்தை உடன் சரி செய்திட ஆண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>08.11.2021</td><td>187</td><td>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட்டுள்ளதால், அதனை சரி செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>08.11.2021</td><td>188</td><td>அரியலூர் நகராட்சி பொறியியல் பிரிவு வார்டு எண்.1 முதல் 18 பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய், பாதாள சாக்கடைத்திட்டம், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு ஆகிய விபரங்கள் அடங்கிய வரைபடம் தயாரித்து ஜல் ஜீவன் மிஷன் திட்டத்திற்கு Total Station Instrument மூலம் அளவை செய்ய 03.11.2021 அன்று பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>VERTEX SURVEY CONSULTANTS, Kulithalai</th><th>D.Sampath Engineering survey & Topo mapping service, Chennai</th><th>RDS Ragul Digital Survey, Cuddalore</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.1 முதல் 18 பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய், பாதாள சாக்கடைத்திட்டம், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு ஆகிய விபரங்கள் அடங்கிய வரைபடம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>3250 (Per KM)</td><td>3900 (Per KM)</td><td>3650 (Per KM)</td></tr>
</table>
மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்த VERTEX SURVEY CONSULTANTS, Kulithalai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அலுவலகம் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>08.11.2021</td><td>189</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள் போதுமான இருப்பு இல்லாத காரணத்தினால் கீழ்கண்ட பொருள்களை வாங்கி வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. பிளிச்சிங் பவுடர் : 3000 கிலோ<br>2. சுண்ணாம்பு : 3000 கிலோ<br>3. லைசால் : 500 லிட்டர்<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>